**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.339/ 2021**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : தனம் | | **Caste** | : | |
| **Husband Name** | : ஜான்பாஸ்கர் | | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | | **Age** | : | **50/2026** |
| | | | **Dated** | : | **10.03.2026** |

**10.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி **திரு. தனம்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்துவருகிறேன். வழக்கின் புலன்விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் ஜெயலெட்சுமி பணி மாறுதல் காரணமாக வெளி மாவட்டம் சென்றுவிட்டதால் அவரின் கையொப்பம், கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 31.03.2019ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளராக திருமதி. ஜெயலெட்சுமி நிலையப்பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற

தகவலைப்பெற்று மருத்துவமனைச்சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திண்டுக்கல் மீனாட்சிநாயக்கன்பட்டி குரும்பப்பட்டியைச்சேர்ந்த கிருஷ்ணகோனார் மகன் பாண்டியன் என்பவரை விசாரித்து புகாரினைப்பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.104/2019 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துராஜா, நாட்ராயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு காலை 08.00 மணிக்கு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்பு சாட்சிகள் பாண்டியன், ராமராஜ், சீனியம்மாள், சரவணன், முத்துராஜா, நாட்ராயன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையனெ தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் 01.04.2019ம் தேதி திண்டுக்கல் பழனி பைபாஸ் மகாலெட்சுமி பேக்கரி அருகே நின்றுகொண்டிருந்த எதிரியை காலை 10.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துவந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சிந்துஜா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயமென சான்று வழங்கியுள்ளார்.சாட்சி ராமராஜ் மற்றும் சீனியம்மாள் ஏற்பட்ட காயங்கள் குறித்து சாட்சிகள் தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து வெளியேறியதால் காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் சாட்சி ராமராஜ் விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும் சாட்சி சீனியம்மாள் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.10 14:02:00 +0530

Judicial Magistrate No.II

Dindigul.